# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.76/2022 | Date | : 26.05.2025 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : சங்ககிரி |
| Name | : ராஜவேல் | Calling | : விவசாயம் |
| Father Name | : மாரப்ப கவுண்டர் | Religion | : இந்து |
| Village | : வடுகப்பட்டி | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.05.2025.

(1, 3, 4, 5 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி அஞ்சல், வேப்பம்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 27-08-2021 ம் தேதி, மதியம் சுமார் 03.00 மணியளவில் சங்ககிரி ஆர்.எஸ் அருகே உள்ள ஒரு பேக்கரியில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். சங்ககிரி போலிசார் அப்போது பெட்ரோல் பங்க் அருகே வந்து ஒரு வழக்கு சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தனர். நான் என்னவென்று தெரிந்துகொள்வதற்காக அந்த இடத்திற்கு சென்றேன். அதற்கு முந்தைய தினம் செல்வகுமார் என்பவர் சம்பந்தப்பட்ட அடிதடி வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்ததாக கூறினார்கள்.

2) போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், என்னுடைய நண்பர் சங்கர் என்பவரும்

சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் சங்கர் என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) வாழக்குட்டை என்ற இடத்தில் உள்ள ராஜாமணி என்பவரின் தோட்டத்திற்கு போலிசார் எங்களை அழைத்து சென்றார்கள். அந்த இடத்தில் உள்ள மோட்டார் ரூமில் செல்வகுமார் என்பவரை அடைத்து வைத்து அடித்ததாக சொன்னார்கள். போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், என்னுடைய நண்பர் சங்கர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் சங்கர் என்பவருடையது ஆகும். ( **ராஜாமணி தோட்டத்தில் வரைந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) மறுநாள் மதியம் சுமார் 02.15 மணியளவில் போலிசார் அழைத்ததின் பேரில் ராஜாமணி தோட்டத்திற்கு நானும், சங்கர் என்பவரும் சென்றோம். அப்போது, ராஜாமணி தோட்டத்தில் உள்ள மாந்தோப்பில் இருந்து Redmi செல்போனை போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினர். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், சங்கரும் சாட்சியாக கையொபப்ம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் சங்கர் என்பவருடையது ஆகும். (**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) அந்த செல்போனை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். செல்போனானது கிரேய் கலர் செல்போன் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் செல்போன் தான் என்முன்னிலையில் கைப்பற்றினார்கள். போலிசார் அதை உடைந்த நிலையில் தான் சம்பவ இடத்தில் கைப்பற்றினர். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> :-

1) செல்வகுமார் (அ.சா.1) என்பவரை எனக்கு யார் என்றே தெரியாது. வழக்கின் எதிரிகளை இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு யார் என்றே தெரியாது. சங்ககிரி போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் வாழக்குட்டையில் அமைந்துள்ள ராஜாமணி தோட்டத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் வாழக்குட்டைக்கு அன்று தான் முதல்முறையாக சென்றேன் என்றால் சரிதான். நான் வாழக்குட்டைக்கு செல்வதற்கு முன்பே போலிசார் அங்கிருந்தனர் என்றால் சரியல்ல, என்னுடன் தான் அவர்களும் வந்தனர்.

2) நான் எனது முதல் விசாரணையில் போலிசார் அழைத்ததன் பேரில் வாழக்குட்டைக்கு சென்றதாக சொல்லிவிட்டு, தற்போது போலிசார் அழைத்து சென்றதாக மாறி மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜாமணி தோட்டத்திற்கு செல்லும் சாலை என்ன வகையான சாலை என்றால் மண் சாலை. எனக்கு திசைகள் தெரியும் என்றால் சரிதான். அந்த மண் சாலைக்கு எந்த திசையில் ராஜாமணி தோட்டத்தின் மோட்டார் ரூம் உள்ளது என்றால் திசை தெரியவில்லை, மண் சாலைக்கு இடதுபுறமாக மோட்டார் ரூம் இருந்தது.

3) ராஜாமணி தோட்டத்தில் என்ன வகையான பயிர் பயிரிடப்பட்டிருந்தது என்றால் கரும்பு போட்டதாக ஞாபகம் உள்ளது. மோட்டார் ரூம் சாலைக்கு கீழ் அமைந்திருந்தது, எவ்வளவு கீழ் அமைந்திருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. மோட்டார் ரூமும், தோட்டமும் சமமாக இருந்ததா என்றால் சமமாக தான் இருந்தது. மோட்டார் ரூமுக்கு ஒட்டினார் போல் தான் கிணறு இருந்தது. மோட்டார் ரூமுக்கு வரும் EB கம்பம் எந்த திசையில் இருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. மோட்டார் ரூமை சுற்றி ஏதேனும் கட்டிடம் இருந்ததா என்றால் ஞாபகமில்லை.

4) ராஜாமணி தோட்டத்தை ஒட்டினார் போல் ஏதேனும் பாதை இருந்ததா என்றால் ரயில்வே பாதை கிழக்கு மேற்காக இருந்தது. ரயில்வே பாதை ராஜாமணி தோட்டத்திற்கு எந்த திசை என்றால் சரியாக தெரியவில்லை. எனக்கு டிரான்ஸ்போர்ட் தொழில் உண்டு என்றால் இல்லை. நான் மொத்தமாக விசாரணையின்போது எத்தனை கையொப்பங்கள் செய்தேன் என்றால் 03 கையொப்பங்கள் செய்தேன், முதல் நாள் இரண்டு கையொப்பம், மறுநாள் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பதை படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்றால் எனது முகவரி, சாட்சியாக நான் ஒப்புக்கொண்டது பற்றியும், பார்வை மகஜர் வரையப்பட்டிருந்தது பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

5) கடந்த 27-08-2021ம் தேதி பார்வை மகஜர் தயார் செய்தபோது எத்தனை போலிசார் வந்திருந்தனர் என்றால் 03 அல்லது 04 போலிசார் வந்திருந்தனர். ராஜாமணி தோட்டம், மோட்டார் ரூம் ஆகியவற்றை சுற்றி பார்த்து தான் வரைபடம் வரையப்பட்டது என்றால் சரிதான். கடந்த 27-08-2021ம் தேதி பார்வை மகஜர் தயார்

செய்தபோது ராஜாமணி தோட்டத்தில் எந்த ஒரு பொருளும் போலிசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கடந்த 28-08-2021ம் தேதி வாழைக்குட்டையில் இருந்து சங்ககிரி போலிசார் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அலைபேசியை கைப்பற்றியதாக கூறி என்னையும், என்னுடன் கையொப்பம் செய்த மேற்படி சங்கரையும் அழைத்தன் பேரில் 01 மணி நேரத்தில் நானும், சங்கரும் அங்கு சென்று கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். இது சம்பந்தமாக எங்களை விசாரணை செய்ய வேண்டும் என்று சங்ககிரி காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் என்றால் சரியல்ல.

6) முதல் நாள் இரண்டு கையொப்பம், மறுநாள் ஒரு கையொப்பம் செய்ததற்கு பின்னிட்டு போலிசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நானும், அ.சா.1ம் இந்த வழக்கிற்கு முன்னிட்டே நண்பர்கள் என்றும், செல்வகுமார் கேட்டுகொண்டதற்கு இணங்க தான் நான் பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்தேன் என்றாலும், நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் தான் வாழக்குட்டையில் உள்ள ராஜாமணி தோட்டம் குறித்த எந்த விவரமும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

*/Sd/-Rajavel*

*/Sd /-S.Sathiya*
*Judicial Magistrate No.1,*
*Sankari.*